சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No.19/2020

பெயர். திருமதி. சத்யா க/பெ. கோதண்டராமன் நாள். 13.08.2025

**எதிர்மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் (உள்ளரங்கமாக விசாரிக்கப்பட்டது )**

1. என்னுடைய முதல் விசாரணை பத்தி 2ல் தொகைகள் பற்றி மட்டும்தான் தெரிவித்துள்ளேன் என்றாலும், வாழ்க்கை குறித்து அதில் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. மனுதாரர் என்ன மனு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியும். நான் ஏற்கனவே தனியார் நிறுவனத்தில் பணி புரிந்தேன். தற்பொழுது எனக்கு வேலை இல்லை. நான் 2019 முதல் மனுதாரரிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறேன். நான் தற்பொழுது நடராஜபுரத்தில் வசித்து வருகிறேனா என்றால் இல்லை, மங்கலத்தில் வசித்து வருகிறேன். என் பிள்ளைகள் பெயர் துர்கேஷ் மற்றும் லிங்கேஷ். என் பிள்ளைகள் 2019 முதல் 2023 வரை குன்னவாக்கத்தில் சர்வ சேவா மெட்ரிகுலேஷன் பள்ளியில் படித்து வந்தார்கள் என்றால் இல்லை. என் பிள்ளைகள் 2ம் வகுப்பு வரை மட்டும் அந்த பள்ளியில் படித்தார்கள். தற்பொழுது என் பிள்ளைகள் இரட்டைமங்கல்ம் அரசு பள்ளியில் பயின்று வருகிறார்கள் என்றால் சரிதான். என்னால் பள்ளிக் கட்டணம் செலுத்த முடியாததால் இரண்டு மாதங்களாக அரசுப் பள்ளியில் படித்து வருகிறார்கள். பிள்ளைகள் என் தாயார் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் நானும் அங்கு கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறேன்.

2) நான் நடராஜபுரத்தில் வசித்து வருகிறேன் என்றாலும், பிள்ளைகள் மங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ம.த.சா.ஆ.4ல் உள்ள புகைப்படங்களில் கண்ட நபர் பெயர் பார்த்திபன். மேற்கண்ட

புகைப்படங்களினால்தான் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்தள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னை நல்ல முறையில் பார்த்து வந்தார் என்றாலும், மேற்கண்ட புகைப்படங்களின் காரணமாகத்தான் மனு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. ம.த.சா.ஆ. 4ல் உள்ள புகைப்படங்களை என் தோழி எடுத்தார். மனுதாரர் கோரியவாறு தீரப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரரின் பிள்ளைகளை மிரட்டி மனுதாரரை பார்க்கவிடவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தன் பிள்ளைகளை நல்ல முறையில் கல்வி உட்பட அனைத்து விஷயங்களும் கொடுக்க தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.